தெரிவிக்கும் பதிப்பு 29/ ஆகஸ்ட் 2022

# INFORM

MINISTRY OF MANPOWER

சிங்கப்பூரில் உள்ள குடிபெயர்ந்த இல்லப் பெண்பணியாளர்களுக்கான மனிதவள அமைச்சகத்தின் வெளியீடு

## உங்கள் பணி தொடர்பான உரிமைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்

சிங்கப்பூரில் நீங்கள் வேலைசெய்யும்போது உங்களது மருத்துவப் பராமரிப்பிற்கு ஆகும் செலவை உங்களுக்குப் பணி வழங்கியவர்தான் கண்டிப்பாகச் செலுத்த வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நீங்கள் செய்ய வேண்டிய மருத்துவப் பரிசோதனைகள், தேவையான போது மருத்துவரிடம் செல்வது, மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தங்குவது ஆகியவற்றுக்கான செலவும் இதில் அடங்கும்.

உங்கள் பணிக்காலம் முடியும்போது உங்கள் வீட்டிற்குச் செல்வதற்கான செக்-இன் லக்கேஜுடன் கூடிய உங்கள் விமானப் பயணச் சீட்டிற்கான செலவையும் உங்களுக்குப் பணி வழங்கியவர்தான் வழங்க வேண்டும். வெளிநாட்டை விட்டு நீங்கள் புறப்படுவதற்கு, உங்கள் விமானப் பயணச் சீட்டின் செலவு பற்றி உங்களுக்குப் பணி வழங்கியவரிடம் ஆலோசியுங்கள் மற்றும் சிக்கல்கள் வராமல் தடுப்பதற்கு எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.




உதவி பெற வேண்டுமா? 1800 339 5505 என்ற எண்ணில் MOM -ஐத் தொடர்புகொள்ளுங்கள்

### SGWorkPass செயலியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இது ஒரு மொபைல் செயலி ஆகும். இதன்மூலம் வேலை பாஸின் செல்லுப்படித்தன்மையைச் சரிபார்த்துக்கொள்ளலாம் மற்றும் உங்கள் பணி பற்றிய விவரங்களைப் பெறலாம். இப்போதே பயன்படுத்திப் பாருங்கள்!




1. விரைவு அணுகல் மெனுவின் கீழ் ‘எனது பணித் தகவல்கள்’ என்பதைத் தட்டவும்
2. உங்கள் சிங்பாஸ் (Singpass) மூலம் உள்நுழையவும்
3. பணி வழங்கியவரின் தகவல்களைப் பார்க்கவும்

செயலியைப் பதிவிறக்க, இங்கே ஸ்கேன் செய்யவும்

சிங்பாஸ் (Singpass) கணக்கிற்குப் பதிவுசெய்ய, இங்கே ஸ்கேன் செய்யவும்

# உதவி தேவைப்படும் ஒரு நண்பருக்கு நீங்கள் எப்படி உதவலாம்?



நீங்கள் கடினமாக உணர்ந்த காலத்தின்போது உங்கள் நண்பர் உங்களுக்கு உதவியதாக உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? நீங்களும் உங்கள் நண்பர்களுக்கு உதவலாம்! உங்கள் நண்பர்களுடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து பேசுங்கள், அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள், தேவைப்படும்போது உதவி தேவை எனில் தயங்காமல் கேட்கும்படி அவர்களுக்கு ஊக்கமளியுங்கள்..





# 17 ஆண்டுகளாக தோழமையான பணி உறவுமுறையை எப்படிப் பராமரிப்பது என்பது குறித்து மரிவிக் மற்றும் சியா குடும்பத்தினரிடமிருந்து கேளுங்கள்!



### கே: சியா குடும்பத்தினர் தனது அக்கறையையும் ஆதரவையும் எப்படிக் காட்டுவார்கள்?

சியா குடும்பம் எனக்குப் பணத்தைச் சேமிப்பது பற்றி ஊக்கமளித்தனர், பிலிப்பைன்ஸில், எனது ஊரில் இடம் வாங்கி வீடு கட்டுவது பற்றி எனக்குக் கற்பித்தனர். மேலும் பேக்கிங் (அடுதல்) மற்றும் சமையலில் எனக்குள்ள ஆர்வத்திற்கும் அவர்கள் ஆதரவளித்தனர். இப்போது என்னிடம் மேம்பட்ட பேக்கிங்கில் தொழில்சார் சான்றிதழ் உள்ளது. பிலிப்பைன்ஸிற்கு நான் திரும்பும்போது, எனது புதிய திறமைகளைப் பயன்படுத்தி எனது சொந்த பேக்கரியைத் திறப்பேன் என நம்புகிறேன்



மரிவிக் கார்சியா
டுமாமாவோ (MDW)

### கே: மரிவிக்கிற்குப் பணிபுரிவதற்கேற்ற நம்பகமான மற்றும் நல்லதொரு சூழலை நீங்கள் எப்படி அமைத்துக்கொடுத்தீர்கள்?

ப: “உங்களுக்கு உதவுபவரை நீங்கள் நன்றாகப் பார்த்துக்கொண்டால், அவரும் நம்மை நன்றாகப் பார்த்துக்கொள்வார்” - இந்த மந்திரத்தைத்தான் எங்களுடன் 17 ஆண்டுகளாகப் பணிபுரிந்த மரிவிக்கிடம் எனது குடும்பம் பின்பற்றியது.

திரு. ஜார்ஜ் சியா
(பணி வழங்கியவர்)



## ஆதரவு மற்றும் பரஸ்பர அக்கறை மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்



# இல்லப் பாதுகாப்பு - குற்றங்களைத் தடுப்பதற்கான உதவிக்குறிப்புகள்

வீட்டில் நீங்கள் தனியாக இருக்கும் போது அல்லது உங்களுக்குப் பணி வழங்கியவரின் குழந்தைகளுடன் மட்டும் நீங்கள் இருக்கும்போது அல்லது வயதானவர்களுடன் மட்டும் இருக்கும் போது அனைவரையும் எப்படிப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வீர்கள்?

- நுழைவாசலையும் கதவையும் எப்போதும் பூட்டியே வைத்திருக்க வேண்டும்.
- யாரேனும் வந்தால், அவர்களின் அடையாள அட்டையைக் காட்டும்படி கேட்கவும், விவரங்களைச் சரிபார்க்க உங்களுக்குப் பணி வழங்கியவரைத் தொலைபேசியில் அழைக்கவும். சந்தேகம் வந்தால் போலீஸை அழைக்கவும்.
- முன்பின் தெரியாதவரை உங்கள் வீட்டில் ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். வந்திருப்பவரை அடையாளம் காண, வெளியில் இருப்பவர்களைப் பார்ப்பதற்காக (டோர் வியூவரைப் ) பயன்படுத்தவும். வந்திருப்பவருடன் பேசும்போது கதவில் செயினை மாட்டியபடியே வைத்திருக்கவும்.
- வீட்டிற்கு வெளியே வீட்டுச் சாவிகளை வைக்க வேண்டாம் (எ.கா. பூந்தொட்டியில், தள விரிப்புக்குக் கீழே).



# அரசாங்க ஏஜென்சிகள் அல்லது வங்கிகளாக ஆள்மாறாட்டத்தில் ஈடுபடும் ஏமாற்றுதல் தொடர்பான மோசடிகளைக் குறித்து கவனமாக இருங்கள



இதுபோன்ற  மோசடிகளில் பொதுவாக நிறுவனத்தில் இருந்து தொடர்புகொள்வதாக உங்களுக்குத் தொலைபேசி அழைப்பு வருவது அடங்கும்

## “+” எண்கள் உள்ளதா எனப் பார்க்கவும்

“+” உடன் கூடிய ஃபோன் எண்கள் பொதுவாக வெளிநாட்டிலிருந்து அழைப்பு வருவதைக் குறிக்கிறது. இதுபோன்ற எண்களிலிருந்து வரும் அழைப்புகளை எடுக்கும்போது கவனமாக இருங்கள், குறிப்பாக உங்கள் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வெளிநாட்டு அழைப்புகள் எதையும் நீங்கள் எதிர்பார்க்காத போது இதுபோன்ற எண்களைக் கொண்ட அழைப்புகளைக் கவனமாகக் கையாளுங்கள். அழைப்பானது “+65” எனும் எண்ணுடன் தொடங்குகிறது எனில், அதைப் புறக்கணித்துவிடுங்கள்.

## யாருக்கும் இரகசியத் தகவல்களை வழங்காதீர்கள்

தனிப்பட்ட விஷயங்கள், வங்கி மற்றும் டெபிட் கார்டு விவரங்களை யாருக்கும் தெரியப்படுத்தக்கூடாது. உங்களுக்கு வரும் ஒருமுறை பயன்படுத்துவதற்கான கடவுச்சொற்களை (OTPகள்) ஒருபோதும் யாரிடமும் பகிரக்கூடாது.

எந்தவொரு அரசாங்க ஏஜென்சிகளோ வங்கிகளோ உங்கள் தனிப்பட்ட விவரங்களைக் கேட்க மாட்டார்கள்; அல்லது தொலைபேசி மூலமாகவோ ரோபோ அழைப்புகள் (தானியங்கு குரல் இயந்திரங்கள்) மூலமாகவோ வங்கிப் பணப் பரிமாற்றங்களைச் செய்ய மாட்டார்கள்.

**உங்களுக்குச் சந்தேகம் இருந்தால்,  மோசடிக்கு எதிரான ஹாட்லைனை 1800 – 722 6688 என்ற எண்ணில் அழைக்கவும்.**

## FAST லைஃப்லாங் மையம் மூலம் உங்கள் எதிர்கால வாழ்க்கைத்தொழிலுக்கான உங்கள் திறன்களை மேம்படுத்துங்கள்!

நீங்கள் வீடு திரும்பிய பிறகு என்ன செய்யலாம் என்பது குறித்து சிந்திக்கிறீர்களா? உங்கள் எதிர்கால வாழ்க்கைத் தொழிலுக்காக உங்களைத் தயார்படுத்திக்கொள்ள, உங்களின் ஓய்வு தினத்தன்று கோர்ஸ்களில் நேரத்தைச் செலவழிப்பதன் மூலம் உங்கள் திறன்களை ஏன் மேம்படுத்திக்கொள்ளக்கூடாது?

பராமரிப்பு வழங்கல், மறிவினையியல் மூலமாக உடல்நலம், வலி மேலாண்மை, நிதி மேலாண்மை, தொழில்முனைசார் திட்டங்கள் போன்ற கோர்ஸ்களை FAST லைஃப்லாங் மையம் வழங்குகிறது. நீங்கள் வெற்றிகரமாக முடித்ததும், நிபுணர் சான்றிதழைப் பெறுவீர்கள்.

மானியம் அளிக்கப்படும் பயிற்சி கோர்ஸ்களின் முழுப் பட்டியலைப் பார்க்க, QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

கூடுதல் தகவல்களுக்கு:

- **training@fast.org.sg** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்
- 6509 1535 எனும் எண்ணில் அவர்களை அழைக்கவும்
- 8514 9344 என்ற எண்ணுக்கு **WhatsApp** செய்தி அனுப்பவும்

## பயனுள்ள தொடர்புகளின் பட்டியலை அறிய, இங்கே ஸ்கேன் செய்யவும்

சிங்கப்பூரில் வேலை செய்வது தொடர்பான கூடுதல் தகவல்களுக்கு, இங்கே செல்லவும்:

வெளியீடுகளும் ஆதாரங்களும் **(mom.gov.sg)**

சிங்கப்பூர் மனிதவள அமைச்சகம் **(MOM)| Facebook**

இன்றே **MOM Facebook** -இல் குழுசேரவும்!